DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.209/2022

Prosecution witness – PW 3

| | | |
|---|---|---|
| Name | : திரு. வழிகாத்தான் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A2 present.)
05.03.2026 – 05.30 PM

முதல் விசாரணை

1. நான் தற்போது சாயல்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை விசாரணை செய்து, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு.பிரகாஷ் என்பவர் தற்போது பணிமாறுதல் ஆகி சென்றுவிட்டபடியாலும் அவர் எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்ததால் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும், வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களை பார்த்தும் அவர்களுக்கு பதிலாக சாட்சியம் அளிக்கிறேன்.

3. கடந்த 18.03.2020ம் தேதி 16.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.பிரகாஷ் என்பவர் சாயல்குடி காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது சாயல்குடி நாடார் தெருவை சேர்ந்த திரு.லிங்கேஸ்வரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று சாயல்குடி காவல் நிலையக் குற்ற எண்.71/2020 பிரிவுகள் 147, 294(b), 506(1) இ.த.ச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வாதியின் புகார் மனு அ.சா.ஆ. 2 ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். வாதியின் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

4. பின்னர் அன்றைய தினமே 17.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் தினேஷ் மற்றும் பாண்டிச்செல்வி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பட்டியல் சாட்சியில் கண்ட சாட்சிகளான லிங்கேஸ்வரன், காளிராணி, கனகாபொன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. பின்னர் சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், சார்பு ஆய்வாளரின் விசாரணையிலிருந்தும் இவ்வழக்கில் 2 வது எதிரி குமார் என்பவரையும் மேலும் 2 நபர்களையும் இந்த வழக்கிலிருந்த நீக்கி சட்டப்பிரிவுகளான 147, 294(b), 506(1) இ.த.ச என்பதனை 294(b), 506(1) இ.த.ச வாக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாற்றம் செய்து அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.

7. பின்னர் இந்த வழக்கின் எதிரிகள் வெள்ளைச்சாமி, மாரிசெல்வம் இருவரையும் அதே தினம் சாயல்குடி பேருந்து நிலையத்தில் காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

8. வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 506(1) இ.த.ச ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:43:43 +0530